# 1

## நல்வழி கண்டு நலங்கொடுப்போர் நமக்காக உயிர் கொடுத்தோர்!

ஜனனமும், மரணமும் நம் கைக்கு அகப்படாத மாபெரும் இரகசியங்களாய் இருக்கின்றன. ஆழமாக சிந்தித்துப் பார்த்தால் பிறப்பு, இறப்பு இரண்டுமே விபத்துக்கள். இவற்றிற்கு எந்த அர்த்தமும் இல்லை. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையிலான மனித வாழ்க்கையோ பொய்யான வாழ்க்கை. வாழ்க்கையில் வருகின்ற போராட்டங்களை எதிர்க்க முடியாமல் மனிதன் தடுமாறுகிறான். நிலைத்து நிற்க முடியாமல் தள்ளாடுகிறான். வருகின்ற தோல்விகளை, துன்பங்களை, வேதனைகளைத் தாங்கிக்கொள்ள முடியாமல் வாழ்வதா? சாவதா? என்று துடிக்கின்றான். வாழ்வா, சாவா என்கின்ற பெரும் போராட்டத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

பூமியில் எங்கு தோண்டினாலும் தண்ணீர் கிடைப்பதில்லை. சில இடங்களில் மட்டுமே தண்ணீர் கிடைக்கின்றது. அதைப்போல பூமியில் பிறந்துவிட்ட எல்லோருமே நிறைவான வாழ்வை வாழ்ந்து விடுவதில்லை. தோண்டிய இடத்தில் தண்ணீர் கிடைப்பது போல 'தோன்றின் புகழொடு தோன்றி'யவர்கள் சிலர்தாம்.

வீதியிலே உலைக்களம் உண்டாக்கி வீடு வீடாய்ச் சென்று பழைய செம்பு, பித்தளைச் சாமான்களை வாங்கிவந்து உருக்கி

அழகான தெய்வச் சிலைகளை வடித்துத் தருகிறார்கள். இவைகளில் ஒன்றிரண்டுதான் பூசை, புனஸ்காரம் செய்யும் அந்தஸ்தைப் பெறுகிறது. முறைப்படி ஸ்தபதிகள் வடிக்கின்ற தெய்வச் சிலைகள் சந்நிதானத்தை அடைந்து சக்தியைப் பெறுகின்றன. அப்படி முறைப்படி வடித்த சிலைகளில்கூட ஒன்றிரண்டு சந்நிதானம் செல்ல முடியாமல் வெளியில் நின்று விடுகின்றது. நட்டுவைத்த சாதாரண கல் தெய்வச் சிலையாக பாவிக்கப்பட்டு பெரிய விழா எடுக்கும் அளவிற்கு செல்வாக்கைப் பெற்றுவிடுகிறது.

இதுபோலத்தான் மனிதப் பிறப்பும், மனித வாழ்க்கையும் வீதியிலே வடிக்கப்படுகின்ற செப்புச் சிலைகள் போல, ஆண் பெண் உடல் இன்ப விளையாட்டின் வாயிலாக வடிவமைக்கப்படுகின்ற மனிதர்கள்தாம் அதிகம். ஸ்தபதிகள் வடிக்கின்ற தெய்வச் சிலை போன்ற பிறப்புகள் குறைவு. நட்டு வைத்த சாதாரண கல் பெரிய செல்வாக்கைப் பெற்றுவிடுவதைப் போல ஒழுக்கமற்றவர், திறமையற்றவர், தகுதியற்றவர் உயர்ந்த நிலை அடைந்து மக்கள் செல்வாக்கைப் பெற்று உயர்ந்த நிலையை அடைகின்றார்கள். தகுதியானவர், ஒழுக்கமானவர், திறமையுள்ளவர் வீதியிலே அல்லல்படுகிறார். செல்வம் பெற்றுவிட்டதன் காரணமாக நட்டு வைத்த சாதாரணக் கல்லுக்கு வாழ்க்கை வரலாறு படைக்கப்படுகின்றது.

நல்லவர்கள் வாழ்வார்கள், தீயவர்கள் அழிவார்கள் என்பதுதான் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்கள் படைக்கப்பட்டதன் நோக்கமாக இருக்கின்றது. எந்த மாபெரும் படைப்பாளியின் படைப்பின் அடித்தளமும், நன்மைக்கும் தீமைக்கும் இடையில் நடக்கும் போராட்டமாகவே அமைந்திருக்கிறது. ஆனால் மனிதனின் எதார்த்த வாழ்க்கையில் நன்மை தலைநிமிர முடியாமல் அழிந்து போவதையும், அவமானப்பட்டு அவலத்தில் வீழ்வதையும், தீமை செய்பவரே மேலாதிக்கம் பெற்று செல்வச் செழிப்போடு ஆடம்பரமாய் வாழ்வதையும் காண்கிறோம்.

படைப்பாளியின் திறமையைப் பொருத்துதான் படைப்புகள் படைக்கப்படுகின்றன. ஒரே மாதிரியான படைப்புகள்கூட, ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாறுபட்ட தகுதியைப் பெறுகின்றன. ஒரு படைப்பாளி ஆயிரக்கணக்கான அன்னக்குத்திகளை படைக்கிறான். ஒரு சில அன்னக்குத்திகள் இரண்டு பேருக்கு மட்டுமே சாதம் பரிமாறும் நிலையையும், ஒரு சில அன்னக்குத்திகள் இருபது பேருக்கு சாதம் படைக்கும் பலசாலியாகவும் அமைகின்றன.

நூறு மாணவர்கள் படிக்கும் ஒரு வகுப்பறையில் ஒரு ஆசிரியர் எல்லா மாணவர்களுக்கும் ஒரே மாதிரியாகத்தான் பாடம் நடத்துகின்றார். ஓரிரு மாணவர்கள் நூறு மதிப்பெண்களையும், சில மாணவர்கள் எண்பது, எழுபது மதிப்பெண்களையும், பல மாணவர்கள் முப்பது, நாற்பது மதிப்பெண்களையும் பெறுகின்றார்கள். அதைப்போலத்தான் படைப்பாளியான இறைவன் மனிதர்களை நிறையும் குறையும் இல்லாமல் ஒரே மாதிரியாகப் படைத்தாலும், படைப்புகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரியான மாறுபட்ட திறமையை, வாழ்க்கைத் தரத்தை அமைத்துக் கொள்கிறார்கள். இது படைப்பாளியின் குற்றமல்ல, படைப்புகளின் தேடல்தான்.

தசரத மகாராசன் காலைக்கோட்டு முனிவனை அயோத்திக்கு அழைத்துவந்து மாபெரும் வேள்விச்சாலை அமைத்து, மகப்பேறு வேள்வி அமைத்ததன் வாயிலாக வேள்விக் குண்டத்தின் உள்ளிருந்து ஒரு பூதம் வெளிப்பட்டுத் தங்கப் பாத்திரத்தில் அமுதம் கொடுத்து மறைந்தது. அந்த அமுதத்தை அரசன் தசரதன் தன் தேவியர் மூவருக்கும் கொடுத்தான். கோசலை, கைகேயி, சுமித்திரை என்ற மூன்று மனைவியர்க்கும் அமுதத்தைப் பகிர்ந்து கொடுத்த பிறகும் மிச்சம் இருந்த அமிர்தத்தை மீண்டும் இளைய மனைவி சுமித்திரைக்கே மன்னன் அளித்தான்.

அந்த அமிர்தத்தால் மூவரும் கருவுற்றனர். புனர்பூச நட்சத்திரம், கடக லக்கினம், கடக ராசியில் கோசலை ஈன்றெடுத்த ஆண் மகன்தான் திரு அவதார இராமன். பூச நட்சத்திரம், மீன லக்கினத்தில் கைகேயிக்குப் பிறந்த இரண்டாவது ஆண் குழந்தை பரதன். பூச நட்சத்திரம், கடக லக்கினம், கடக ராசியில் பிறந்த மூன்றாவது குழந்தை இலக்குவன். மக நட்சத்திரம், சிம்ம லக்கினம், சிம்ம ராசியில் பிறந்த இன்னொரு குழந்தை சத்ருக்கனன்.

அரசனாகப் போகும் இராமனை அரசியல் தெரிந்த கைகேயி இடமும், பரதனைக் கோசலையிடமும் கொடுத்து வளர்க்கச் செய்தான் தசரத மன்னன். இது திரு அவதாரங்களின் பிறப்பு.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் யூதேயா நாட்டில் உள்ள பெத்லஹேம் சிற்றூரில் அன்னை மரியாள் கன்னியின் மணி வயிற்றில் பிறந்தவர் இயேசுபிரான்.

'நீங்கள் எங்கிருந்தாலும் இறைவனை அஞ்சுங்கள். இறைவன் உம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். தீமைக்குப்பின் நன்மை செய்யத் தொடங்குங்கள். அந்த நன்மை தீமையை அழித்துவிடும். மேலான குணத்துடன் மக்களிடம் பழகுங்கள்' என்று மார்க்கத்தின் வாழ்க்கை நெறியை, வாழும் முறையை போதித்த பெருமானார் நபிகள் நாயகம் கி.பி. 571ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ம்நாள் திங்கட்கிழமை அவனியில் அவதரித்தார்கள். இவர்கள் அவதார புருஷர்கள்.

'தெய்வம் ஒன்று' என்பதை உணர்த்தியவரும், உருவமற்ற ஒளிமயமானவன் இறைவன் என்று சொல்லி மதமாயை இருளை அகற்ற வந்த இளஞாயிறாய் சுபானு ஆண்டு புரட்டாசித் திங்கள் 21ம் நாள், அதாவது 1823ம் ஆண்டு அக்டோபர் மாதம் 5ந்தேதி தமிழகத்தில் தோன்றியவர்தான் 'அருட் பிரகாச வள்ளலார்' என்று புகழப்படுகின்ற இராமலிங்க சுவாமிகள். அருள் நெறியைப் பரப்பிய இவருடைய பிறப்பு தெய்வீகப் பிறப்பு.

நாப்பிளக்கப் பொய் உரைத்து நவநிதியம் தேடி
நலன் ஒன்றும் அறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வருகின்ற புற்றுஈசல் போலப்
புலபுல எனக் கலகல எனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகை அறியீர் கைவிடவும் மாட்டீர்
கவர்பிஎ ந்த மரத்துளையில் கால்நுழைத்துக் கொண்டே
ஆப்பு அதலன அசைத்துவிட்ட குரங்கதனைப் போல
அகப்பட்டீர் கிடந்து உழல அகப்பட்டீரே!

என்று பாடிய திருவெண்காடர் என்கின்ற பட்டினத்தார், திரைகடல் ஓடி திரவியம் தேடும் வணிகர் மரபில் வந்த சிவநேசன் செட்டியார் - ஞானகலை ஆச்சி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர். இவர் பிறந்தபோது இவர் கழுத்திலும், கைகால்களிலும் ஆடிய தங்க நகைகள் போலவே இவருடைய தொட்டிலுக்கும் நவமணிகள் பூட்டப்பட்டிருந்தனவாம். இது ஒரு செல்வந்த செட்டியாரின் பிறப்பு.

'ஜனகணமன' தேசியகீதப் பாடலை இயற்றியவர் ரவீந்தரநாத் தாகூர். இவர் உலகம் போற்றும் ஒப்பற்ற கவிஞர். இவர் மேற்கு வங்காளத்தின் தலைநகராகிய கல்கத்தாவில் 1861 ஆம் ஆண்டு மே மாதம் 7-ந்தேதி பிறந்தவர். இருபத்தி மூன்றாம் வயதில் மிருணாளினி தேவியார் இவருடைய துணைவியானார். இவர் சில ஆண்டுகளில் மரணம் அடைந்தார். மனைவி இறந்த பிறகு குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பு ரவீந்தரநாத்துக்கு கூடியது. முதல் மகன் காலமானான். தந்தையார் காலமானார். அடுத்து இளைய மகனும் காலமானான். தொடர்ந்து இழப்புகளைச் சந்தித்த தாகூர் மீளாத் துயருற்றார். உலகப் புகழ்பெற்ற 'கீதாஞ்சலி' எனும் நூலைத் தந்தவர். இவர் நோபல் பரிசு, டாக்டர் பட்டம், சர் பட்டம் பெற்றவர். 1941ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7ந்தேதி மரணமடைந்தார்.

'ஆ! மனிதன் எப்படிப்பட்ட அற்புதப் படைப்பு' என்பதை தன்னுடைய சிகரமான செய்தியாகச் சொன்ன, ஈடு இணையற்ற மேதையாகத் திகழ்ந்த மகாகவி ஷேக்ஸ்பியர் இங்கிலாந்தில்

ஸ்டிராபோர்டு என்ற ஊரில் 1564 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ந்தேதி ஜான் ஷேக்ஸ்பியருக்கும் மேரி ஆர்டனுக்கும் மகனாகப் பிறந்தவர்.

ஒன்பது வயதில் பள்ளிக் கூடத்தில் சேர்ந்து, பன்னிரெண்டாம் வயதிலேயே பள்ளிப் படிப்பை நிறுத்திய படிப்பறிவு இல்லாதவர். தன்னைவிட எட்டு வயது மூத்தப் பெண்ணை திருமணம் செய்து கொண்டார். மனநிறைவில்லாத திருமணம், வறுமைச்சூழல், அரைகுறைக்கல்வி, மகனின் மரணம் எல்லாம் சேர்ந்து ஷேக்ஸ்பியரை நிலைகுலையச் செய்தது.

நாடக அரங்கின் வாயிற்காவலனாக, நாடக அரங்கிற்குள் எடுபிடியாக, பிறகு நாடகங்களில் சிறிய சிறிய பாத்திரங்களில் நடிகராக உழைத்த ஷேக்ஸ்பியர் மூன்றே ஆண்டுகளில் ஒரு நாடக மேதையாகி, இருபது ஆண்டுகளில் 37 நாடகங்களையும், காவியங்களையும், கவிதைகளையும் வழங்கினார். பல்கலைக் கழகத்தில் கற்றவர்களையும், மேல்படிப்பு படித்தவர்களையும், அரைகுறை கல்வி பெற்ற ஷேக்ஸ்பியர் விழுங்கிவிட்டதுக் கண்டு இங்கிலாந்து மக்கள் பெருவியப்படைந்தனர். 'மேதமை' என்பது பட்டப்படிப்பால் மட்டும் இல்லை என்பதை நிரூபணம் செய்தவர். 52 வயதில் தான் பிறந்த நாளன்றே மரணம் அடைந்தார்.

இப்படி அவதாரங்களாய், செல்வந்தர்களாய், அருள்நெறியாளர்களாய், மகா கவிகளாய்ப் பிறந்தவர்களும் கூட வாழ்க்கையில் வெளிச்சத்தைக் காண முடியாமல், துன்பத்தைத் தாங்க முடியாமல் தடைகளில் சிக்கித் தவித்திருந்தாலும் நம்பிக்கையோடு வாழ்ந்து உலகத்தில் தடம்பதித்துச் சென்றிருக்கிறார்கள். எல்லாத் திறமைகளையும், சக்திகளையும் ஒழுங்குபடுத்தி வலுவூட்டி பிறருக்காகவே வாழ்ந்திருக்கிறார்கள். இவர்களுடைய பிறப்பு ஒரு விஸ்வரூபத்தைக் கண்டிருக்கிறது. இவர்களுடைய மார்க்கத்தை, இவர்களுடைய பாதையை இவர்களாகவே வகுத்துக்

கொண்டவர்கள். நாம் வாழ்வதற்கான வழிமுறைகளை இந்த உலகத்திலே பதிவு செய்து மறைந்தவர்கள். இவர்களுடைய வாழ்க்கை வரலாறு நமக்கு மிகவும் அவசியம்.

சலவைக்கல் பதித்த பொன் முலாம் பூசப்பட்ட நெப்போலியன் கல்லறையில் காணும் செய்தி இது. 'இதோ, இவன் ஒரு பெரிய வீரன். பாரீஸ் வீதிகளிலே மக்களை சுட்டுக் கொன்றவன் இவன். ருஷ்யாவின் பனி என்ற காலாட்படையையும், சூறாவளி என்ற குதிரைப் படையையும் இலையுதிர் காலத்தில் உதிர்ந்து போன சருகுகளைப் போல் ஆக்கியவன். இவனால் விதவையானவர்களும், அனாதையானவர்களும் எத்தனை பேர்? அவன் புகழுக்காக ஓடிய கண்ணீர் வெள்ளம் எவ்வளவு? வாள் வலிமையை நம்பி வாழ்ந்த அந்த சர்வாதிகாரிக்காக வருத்தப்படுவதற்கே ஆள் இல்லாமல் மடிந்து போனான் நெப்போலியன்.

நெப்போலியனைப் போல், ஹிட்லரைப்போல், அலெக்சாண்டரைப் போல் சர்வாதிகாரிகளாய் இருந்து, வெறிகொண்டு, அழிவு வேலைகளில் ஈடுபட்டு, பழி சின்னமாக வாழ்ந்து அழிந்து போனவர்களையும் உலகம் மறந்துவிட வில்லை. அந்த சர்வாதிகாரிகளின் வாழ்க்கை வரலாறுகளிலும் நமக்குத் தேவையான பாடங்கள் இருக்கின்றன.

வாழ்க நீ! எம்மான் இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டு
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா நீ வாழ்க! வாழ்க!

என்று மகாகவி பாரதி வாழ்த்தினானே அந்த அஹிம்சா மூர்த்தி தன் வாழ்க்கையில் ஏற்பட்ட சோதனைகளைக் கடந்து,

அஞ்சாமல் செயல்பட்டு, இறை நம்பிக்கையின் வாயிலாகவும், அஹிம்சையின் வாயிலாகவும் வரலாறு படைத்தவர் அண்ணல் காந்தியடிகள். 'சத்திய சோதனை' வாயிலாக சுயசரிதம் படைத்தவர்.

'நெல்லுக்கு இரைத்த நீர் வாய்க்கால் வழியோடி
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் – தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல்அவர் பொருட்டு
எல்லாருக்கும் பெய்யும் மழை'

- என்பது போல இவர்களைப் போன்றவர்கள் வாழ்ந்து காட்டிய வழிப்பாதையின் வாயிலாகத்தான் உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இவர்களுக்கெல்லாம் வாழ்க்கை வரலாறு உண்டு. சுய சரிதை உண்டு. தேவாலயங்களாக வாழ்ந்த இவர்களின் சுயசரிதை அவசியம். தேவையில்லாமல் வாழ்கின்ற என்னைப் போன்றவர்களின் வாழ்க்கைக் குறிப்பு தேவையா? என்று சிந்தித்துப் பார்த்தால், என் பிள்ளைகளுக்காக, சந்ததியினருக்காக வாழ்க்கைக் குறிப்பு தேவைதான் என்றே நினைக்கத் தோன்றுகிறது. அதன் வெளிப்பாடுதான் இந்நூல்.

இறைவன் நம்மைப் படைக்கும்போதே சாதனையாள னாகவோ, கோழையாகவோ, சாதாரண மனிதனாகவோ படைப்பதில்லை. புகழோடு வாழ்வதும், பழியோடு வாழ்வதும் நம் நடத்தையில்தான் உள்ளது. நல்ல வழிகாட்டுதலோடு, முயற்சியோடு உழைத்தால் வெற்றியாளனாக வாழ்ந்து மறையலாம். 'ஊர்வன, பறப்பன, உயிர்வாழ்வன என இம்மண்ணிடைப் பிறந்தன. இவையாவையும் பிறப்பன இறப்பன' என்று கவியரசு கண்ணதாசன் சொன்னதைப் போல மரணம் நிச்சயம். மரணம் சம்பவித்த பிறகு வாழ்க்கைக் குறிப்பு ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியம்.

விக்ருதி ஆண்டு ஆனி மாதம் 6ந்தேதி செவ்வாய்க்கிழமை அதாவது 1950ஆம் வருடம் ஜூன் மாதம் இருபதாம் தேதி இரவு 11.50 மணிக்கு மக நட்சத்திரம், கும்ப லக்கினம், சிம்ம

ராசியில் நான் பிறந்ததாக என் தாயார் சொல்லியும், நான் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்ட பிறகும், சோதிடர் வாயிலாக என் தந்தையார் எழுதி வைத்திருந்த ஜாதகப் புத்தகத்தைப் பார்த்தும் தெரிந்துகொண்டேன்.

சென்னை, கோடம்பாக்கம், தலையாரி தெரு, 10ஆம் எண் வீட்டில் என் பெற்றோர்கள் குடியிருந்தபோது நான் பிறந்ததாக என் பெற்றோர்கள் சொல்வார்கள். ஆற்காடு நவாப் குதிரைகளோடு வந்து குதிரைகளை ஒரு இடத்தில் விட்டுவிட்டு அவன் செல்ல வேண்டிய இடத்திற்குப் போவானாம்.அப்படி குதிரைகள் தங்கும் இடத்தை 'கோடா பாத்' என்று அழைப்பார்களாம். 'கோடா' என்றால் குதிரை; 'பாத்' என்றால் தங்குமிடம். கோடாபாத் என்பதே நாளடைவில் கோடம் பாக்கமாய் மாறியதாம். அந்தக் கோடம்பாக்கத்தில் பிறந்தவன் நான். படிக்காத மேதை வி.எம். கண்ணாச்சாரி - ரோஜாம்பாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவன் நான். என்னுடைய முதல் கல்விக்கூடம் என் தாயின் கருவறைதான்.



## 2

## எனது பிறப்பு எனது விருப்பமா?

'பி'றப்பு' என்பது வினோதமானது, விசித்திரமானது. இந்த சமயத்தில், இந்த சாதியில், இன்ன பெற்றோர்களுக்கு பிள்ளையாகப் பிறக்க வேண்டுமென்றோ, இப்படித்தான் பிறக்க வேண்டுமென்று விரும்பியோ யாரும் பிறப்பதில்லை. நாய்கள் கூட தெரு நாயாக, வீட்டு நாயாக, நடிகை வீட்டு நாயாக, மோப்பம் பிடிக்கும் போலீஸ் நாயாகப் பிறப்பது உண்டு. இது

பிறப்பு பாதி. வளர்ப்பு மீதி. இளவரசன் பிறந்த அதே நாள், அதே நேரத்தில், செருப்பு தைக்கும் தொழிலாளி ஒருவனுக்கு ஆண் குழந்தை பிறந்தது. மன்னன் தன் மகனுக்கு சோதிடம் பார்த்த அதே ராஜாங்க சோதிடரிடம் தன் மகனுக்கும் சோதிடம் பார்த்தான் செருப்பு தைக்கும் தொழிலாளி.

'இளவரசனுக்கு பட்டம் சூட்டும் அதே நாளில் அதாவது உன் மகனுக்கு இருபது வயது மூன்று மாதம் பதினாறு நாள் பூர்த்தி ஆகும்போது அவனுக்கும் பட்டாபிஷேகம் நடக்கும்' என்று சோதிடர் சொன்னார். தொழிலாளிக்கு அளவுகடந்த மகிழ்ச்சி. அளவு கடந்த செல்லம் கொடுத்து வளர்த்ததால் மகன் படிக்காமல் பாழாய்ப் போனான். இருபது ஆண்டுகள் கழிந்தன. இளவரசன் பட்டாபிஷேக நாள் குறிக்கப்பட்டு நாடு முழுவதும் கோலாகலம் பூண்டது. பட்டாபிஷேக நேரமும் வந்தது. செருப்பு தைக்கும் தொழிலாளி தன் மகனைத் தேடி அலைந்தான். ஆற்று ஓரம் ஒரு நாடகக் கொட்டகையில் மன்னனாக நடித்த தன் மகனுக்கு அதே நேரத்தில் பட்டாபிஷேகம் நடைபெறுவதைக் கண்டு கண் கலங்கினான் செருப்பு தைக்கும் தொழிலாளி.

பூர்வ ஜன்ம பலனால் உண்டானது விதி அல்ல. 'ஒரு மனிதனின் சுபாவமே விதி' என்றார் ஷேக்ஸ்பியர். பேராசை, சஞ்சலம், சந்தேகம், கள்ளம், கபடம், காமம் இப்படி ஒவ்வொருவரிடம் ஒவ்வொரு சுபாவம் இருக்கும். எல்லா மனிதர்களுக்குள்ளும் மர்மமாய் மறைந்திருக்கும் அவரவர் குணம்தான் அவரவர் விதியாக செயல்படுகிறது. மனிதனின் இயல்பு, சுபாவம்தான் மனிதனை ஆட்டிப் படைக்கும் விதியாகச் செயல்படுகிறது என்பதுதான் ஷேக்ஸ்பியரின் கருத்து. 'நினைப்புதான் பிழைப்பை கெடுக்குது' என்கின்ற முதியோரின் முதுமொழிதான் இது.

கடும் உழைப்பாளியும், படிக்காத மேதையுமான வி.எம்.கண்ணன் அவர்களுக்கும், எங்களை சுமந்தது மட்டுமல்லாமல் எங்கள் குடும்ப பாரத்தை சுமந்த சுமைதாங்கி ரோஜாம்பாளுக்கும் நான்காவது மகனாகப் பிறந்தவன் நான்.

குழந்தை பிறந்த மூன்றாம் மாதம் அல்லது ஐந்தாம் மாதம் குழந்தையை தொட்டிலில் போடுவது என்பது ஒரு வழக்கு. தொட்டில் வாங்க வசதியில்லாதவர்கள் துணியாலே தூளி கட்டி அதில் குழந்தையை இடுவர்.

வாங்குமணி வாங்கி – வைரமணி கல்லிழைத்து
தூங்குமணித் தொட்டிலிலே – தூங்கிடம்மா ராசாத்தி!

என்று தொட்டிலில் போடும் குழந்தையை தாலாட்டுவார்கள்.

எட்டுகெசம் பட்டெடுத்து – எளங்கையில் ஏணைகட்டி
ஆட்டுங்கோதான் தாதியம்மா – அரிசந்திரன் பேரைச்சொல்ல
எட்டுசேரு சர்க்கரையாம் – எளந்தேங்கா துருவிக்கொட்டி
கொட்டி நன்கு கிளறுங்க – கொடிப் பிரப்பங் கூடையிலே
அள்ளி நல்லா வழங்குங்களேன் – அறியாப்பிள்ளைக் காப்பரிசி!

என்று துணியால் கட்டிய தூளியில் இடும் குழந்தையை தாலாட்டுவார்கள். தாலாட்டும் தொட்டில்தான், நாளைய நமது சவப்பெட்டி என்பதையும், இன்றைய தாலாட்டுதான் நாளைய ஒப்பாரி என்பதையும் நாம் நினைத்துப் பார்ப்பதில்லை.

மன்றுபுகழ் கோசலைதன் மணிவயிறு வாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன்முடிகள சிந்துவித்தாய் செம்பொன்சேர்
கன்னிநன்மா மதில் புடைசூழ் கணபுரத் தெம் கருமணியே
என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ!

என்று இராகவனாம் இராமபிரானை தாலாட்டியதைப் போல என்னைத் தாலாட்ட என் தாய்க்கும் விருப்பம்தான். ஆயின், நான் அவதாரமோ, இராஜ பரம்பரையோ இல்லையே.

தேக்குமரம் கடைந்து செய்ததொரு தொட்டிலிலே
ஈக்கள் நுழையாமல் இட்ட திரை நடுவில்
பொன் முகத்திலே யிழைத்த புத்தம்புது நீலச்
சின்ன மணிக் கண்ணை இமைக்கதவாய் மூடிவைப்பாய்

என்று பாவேந்தர் பாரதிதாசன் தாலாட்டுப் பாடலைப் பாட என் தாய்க்கு ஆசை. ஆனால் அவர் தமிழ் கற்றவர் அல்லர்.

ஆயிரங்காலம் அரசுக்கு நீர் ஊற்றி
முன்னூறு காலம் முல்லைக்கு நீர் ஊற்றி
தொண்ணூறு காலம் துளசிக்கு தீர்த்தம் விட்டு
எடைக்கு எடை பொன்கொண்டு ஏந்திழையைத் தந்தாளே

என்று பாடும் அளவிற்கு என்னை என் தாய் தவமிருந்து பெற்றெடுக்கவில்லை.

தேன்தரும் மலரே
திருநாள் சிலையே!
வான்தரும் மழையே
வளரும் பிறையே!
காவியக் கலையே
காவிரிக் கரையே!
தீபத்தின் ஒளியே
தெய்வத்தின் நிழலே!

என்று வாயாரப் பாடி மட்டுமே தாலாட்டினாள் என் தாய்.

மாணிக்கத்தால் மகரகண்டி – என் கண்ணே
வச்சிரத்தால் பொன்பதக்கம்
காலுக்குத் தண்டை – என் ஐயா
கழுத்துக்கு வீரத்தண்டை
கொண்டைக்குக் குப்பி
கொண்டு வந்தார் தாய்மாமன்

என்றுகூட என் தாய்மாமன் எதையும் கொண்டுவந்து கொடுக்கவில்லை.

விழுப்புண் படலே சிறப்பு என்கின்ற சங்ககால வீரத்தின் அடையாளமாகத்தான் ஆண் பிள்ளைகளுக்கும் காது குத்துவது வழக்கமானது. எந்தக் குழந்தையாக இருந்தாலும் இளம் வயதில் காதுகுத்தி அடையாளம் ஆக்கிவிட்டால் அதுவே விழுப்புண்ணின் சிறப்பாகும். இப்படித் தோன்றிய காதணி விழா நிகழ்ச்சிகள் நாளடைவில் பொன் பெறவும், பொருள்

பெறவும் நடக்கின்ற சடங்குகளாக மாறிவிட்டன. காது குத்தும் செயலைத் தாய்மாமன் ஏற்பது, சீர்வரிசை வைப்பது என்பது சமுதாய வழக்கமாகிவிட்டது. அந்த விழுப்புண்ணும் எனக்கில்லை.

பெட்டி திறந்து
பிடித்த பிடி பொன்னெடுத்து
அத்திக்காய் வாளிசெய்து
மலர்ந்த ஜிமிக்கை செய்து
மாமன் மடியிலே
மாலைபோட்டுக் குந்தவைத்துக்
கோடி உடுத்திக்காது
குத்துமென்பார் சுந்தரர்க்கு

தங்கத்தால் வாளி செய்யும், ஜிமிக்கை செய்யும் குலமே என் குலமாய் இருந்தும் எனக்கு ஏனோ காது குத்தவில்லை.

காது குத்தவாராக
கனகமுடி உங்கள் அம்மான்
என்னரசன் காதுகுத்த
என்ன சொல்லும் ஆச்சாரி

ஆண் குழந்தை பிறக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட என் பெற்றோர்களுக்கு முதல் மூன்று குழந்தைகளும் பெண் குழந்தைகளாகவே பிறந்து நான்காவது குழந்தையாக நான் பிறந்தேனாம். தவமிருந்து பிறந்த குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று சிந்தித்தார்களாம். விளையும் நெல்லுக்குக்கூட காரணம் கண்டு பெயர் வைப்பது நம் முன்னோர்கள் பண்பாடு.

ஒரு வகை நெல்மணி வளைந்திருக்கும். அதற்கு 'நெடுமூக்கன்' என்று பெயரிட்டார்கள். காடை பறவையின் கழுத்து போல பளபள என்றிருக்கும் ஒரு வகை நெல்லை 'காடை கழுத்தன்' என்றார்கள். நல்ல மணமுள்ள நெல்லுக்கு 'புனுகுச்சம்பா' என்றும், குட்டி குட்டியாய் இருக்கும் சிறிய

நெல்லுக்கு 'சீரகச்சம்பா' என்றும், கடினமான நெல்லை 'கல்லுண்டை' என்றும் சொல்லி நெல்லுக்குள்ளும் சொல்லைப் புகுத்தினார்கள்.

மாதவிக்கு மகள் பிறந்தாள். அவளுக்கு பெயர் சூட்டு விழா. என்ன பெயர் வைப்பது என்று சிலர் கேட்டபோது, கோவலன் 'இடுக்கண் வந்த காலத்தில் தன் முன்னோர்களைக் காத்த குல தெய்வமான மணிமேகலா தெய்வத்தின் பெயர் இடுக!' எனக் கூறினான். எனவே மாதவியின் மகளுக்கு 'மணிமேகலை' எனப் பெயரிட்டார்கள். அதைப் போல என் பெற்றோர்கள் எனக்கு மூர்த்தி (கடவுள் சிலை) என்று பெயர் வைத்தார்கள். விநாயக மூர்த்தி, சிவ மூர்த்தி, கருணாமூர்த்தி, தட்சணா மூர்த்தி என்றெல்லாம் பெயர் வைக்காமல் வெறும் மூர்த்தி என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

கண்ணான கண்ணுக்குக்
கண்ணேறு வாராமல்
சுண்ணாம்பும் மஞ்சளுமாய்ச்
சுற்றியெறி கண்ணனுக்கு

என்று கண்பட்டு நோயுறாதிருக்க கண்ணேறு கழித்து என்னை வளர்த்தாள் என் தாய்.

நானோ குருவியாகப் படைக்கப்பட்டேன். பெற்றோர் களோ என்னை மயிலாக வளர்க்க நினைத்தார்கள். எனக்கு அறிவு தெரிந்த பிறகு குயிலாகவாவது வாழவேண்டுமென நினைத்தேன். குருவியாகப் படைக்கப்பட்டும் அடிக்கடி சிறகுகள் வெட்டப்படுவதால் என்னால் பத்து அடி உயரம்கூட பறக்க முடியவில்லை. ஆனால், கூண்டுக்குள் அடைக்கப் படாமல் சுதந்திரமாய் வாழ்வதில் ஒரு அற்ப மகிழ்ச்சி.

நான் சந்தோஷமாக, ஆனந்தமாக வாழ்ந்த நாட்களே குறைவு. எதிர்பார்ப்புகள் இல்லை என்றாலும், எட்டுக்கு அடுத்த எண் ஒன்பது என்று முறையாக இருக்க வேண்டியது கூட என் வாழ்க்கையில் ஏழாக மாறியதைத்தான் நான் கண்டிருக்கிறேன்.

நான் நஞ்சை நிலம்தான்; ஆனால் ஒரு முறை கூட நெல் விளைந்ததில்லை. நான் வளமான தென்னை மரம்தான்; ஆனால் இளநீரே காய்த்ததில்லை. நான் நதிதான்; ஆனால், கரைபுரண்டு நீர் ஓடியதில்லை. நான் கவிதைதான்; ஆனால் பொருளோ, எதுகை மோனையோ என்னிடம் இல்லை. நான் மனிதன்தான்; ஆனால் மனிதன் பெற வேண்டிய சுகங்களைப் பெற்றதில்லை.

கொடுத்ததை எல்லாம் உண்ண முடியாமல், உண்டதை எல்லாம் செரிக்க முடியாமல் வாந்தி எடுக்கும் வயிற்றின் அமைப்பே என் வாழ்க்கையின் அமைப்பு. இது தன்னம்பிக்கையின் தளர்ச்சி அல்ல. விடாமுயற்சியின் வெளிப்பாடு. தண்ணீர் பஞ்சக் காலத்தில் பேய் மழை பெய்தும், தண்ணீரைப் பிடித்து வைக்க எந்தப் பாத்திரமும் இல்லாததைப் போலவே எனக்கு வந்த வாய்ப்புகள் யாவும் வீணாயின.

எண்ணற்ற வாய்ப்புகள் என் வீட்டுக் கதவைத் தட்ட எழுந்து வருகின்றன. ஆனால், என் வீட்டிற்கோ கதவுகளே இல்லை. பரமபதம் ஆட்டத்தில் முடியைத் தொடும்போது அடிக்கு அழைத்துச் செல்லும் கொடிய விதி எனக்குண்டு. பரமபதத்தில் வழிநெடுக ஏற்றிவிடும் ஏணிகள் எனக்கும் கிடைப்பதுண்டு. ஏனோ அவைகள் கால் உடைந்த ஏணிகளாகவே இருக்கின்றன. எதிர்பாராத சம்பவங்களின் எதார்த்தத் தொகுப்பே என்னுடைய வாழ்க்கை ஆனது. சிலவற்றை மட்டுமே கூட்டிக் கொடுக்கும் இறைவன் பலவற்றைப் பறித்து விடுகிறானே!

பாவங்களும், பலவீனங்களும் கலந்த கலவைதான் மனிதன். நான் அடிக்கடி நினைப்பதுண்டு; மனிதனாய்ப் பிறந்ததைவிட பறவையாய், விலங்காய்ப் பிறந்திருக்கலாமென்று. விலங்குகள் கிடைத்ததை உண்ணுகின்றன. கிடைக்காததை எண்ணுவதில்லை. பழிவாங்கும் குணம் விலங்குகளுக்குக் கிடையாது. கோபம் வந்தால் சண்டையிடும். மீண்டும் கூடிவிடும். எந்தப் பறவையும் சோர்ந்து போவதோ, அதற்கு வியர்த்துக் கொட்டுவதோ கிடையாது. எந்த

விலங்குக்கும் இரத்தக் கொதிப்போ, சர்க்கரை நோயோ கிடையாது. எந்தப் பறவையும் இன்னொரு பறவையின் கூட்டைச் சிதைப்பதில்லை. காட்டுக்குள்ளே அவைகள் கூட்டு வாழ்க்கை வாழ்கின்றன. எல்லா விலங்குகளும் மனிதனுக்குப் பாலூட்டுகின்றன. எந்தப் பெண்ணும் விலங்குகளுக்குப் பாலூட்டியதில்லை.

பூகம்பம் வருவதையும், கடல் கொந்தளிப்பதையும் விலங்குகளும், பறவைகளும் முன்கூட்டியே தெரிந்துகொண்டு விலங்குகள் சத்தமிடுகின்றன; பறவைகள் அடிவயிற்றில் சிறகடித்துக் கொள்கின்றன. விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் தெரிந்தது மனிதனுக்குத் தெரியவில்லை. ஆனால், இவைகளுக்கு குறைந்த அறிவு, மனிதனுக்கு 'ஆறறிவு' என்கிறோம். விலங்குகளுக்கோ பறவைகளுக்கோ சிரிக்கத் தெரிந்திருந்தால் மனிதனைப் பார்த்து இவைகள் சிரிக்கும். ஒரு விலங்கை விட, பறவையை விட நான் உயர்ந்தவன் இல்லை.

நான் சிட்டுக்குருவியாய் படைக்கப்பட்டவன். சிட்டுக் குருவிகள் வல்லூறைப் போல் கொத்தும் திறன் அற்றவை. கூர்மையான நகம் அற்றவை. வல்லூறைவிட பலத்தில் குறைந்தவை. ஆனால் ஒரு காலம் வரும். அப்போது சிட்டுக் குருவிகள் வல்லூறை வெல்லும் என்று கவிஞர் இக்பால் சொன்னதுபோல இந்த சிட்டுக்குருவி விதியை வெல்லும் காலம் வருமெனக் காத்திருந்து காத்திருந்து தொடர்ந்து காத்துக் கொண்டே வாழ்கிறோம். மேலும் மேலும் போராட்டங்கள் என்னை அழுத்தும்போது நான் கலங்காமல் இருக்கப் பழகிக்கொண்டேன்.

உன்னிடம் கவிதை என்னும் பொன் இருந்தால்
வாழ்க்கை என்னும் உரைகல்லில்
அதைத் தேய்த்துப் பார்!
நெடுநாள் நீ பஞ்சணையில் புரண்டாய்!
இப்போது காட்டுத் தரையில் படுத்துப்பார்!
கொதிக்கும் மணலில் உருளவும்
குளிர்ந்த நீரில் மூழ்கவும் கற்றுக்கொள்!

எத்தனைநாள் 'புல்புலைப்'
போல் கூவி அலைவாய்?
எத்தனை நாள் குளிர்ச் சோலையில் வாழ்வாய்?
மலையின் உச்சியில் ஓர் கூடு கட்டு!
வாழ்க்கைப் போராட்டத்துக்கு
உன்னைப் பழக்கு!
வாழ்க்கைத் தணலில்
உன் உடலையும்
ஆத்மாவையும் போட்டெடுக்கப்
பழகிக்கொள்!

என்கின்ற 'அல்லாமா இக்பால்' கவிதை வரிகளைப் போல வாழ்க்கைப் போராட்டத்திற்கு என்னை பழகிக்கொண்டேன்.

ஒவ்வொருவருடைய பிறப்புக்குப் பின்னாலும் ஓர் அர்த்தம் இருக்கிறது என்பதைப் பலர் சொல்லக் கேட்டிருக் கிறேன். என் பிறப்பின் அர்த்தம் என் வாழ்க்கையின் முடிவில் மற்றவர்களுக்கு மட்டுமே புரியும். 'மரணம் வந்தால் தெரிந்து விடும்; நான் வாழ்ந்த வாழ்க்கை என்ன'வென்று புரிந்துவிடும்.



# 3

# வாழ்வதற்கான வழிமுறைகளை வகுத்துத் தந்த கல்விக்கூடம்!

இந்த உலகம் பழையதுதான். ஆனால் அது நாள்தோறும் புதுப்பிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. ஒவ்வொரு நாளும் புதிய புதிய கண்டுபிடிப்புகள். அந்த கண்டுபிடிப்பு களிலும் ஒவ்வொரு நாளும் ஒரு நவீன மாறுதல். ஒவ்வொரு நாளும் மனிதன் புதியனவற்றைத் தேடி அலைகிறான். வாழ்வின் வெற்றிக்கான திறவுகோல் 'தேடுதல்'தான். நாமும் புதிய முயற்சிகளை, வாய்ப்புகளைத் தேடி அலைகிறோம்.

அப்படி வாய்ப்புகளைத் தேடி அலைந்த என் தந்தையார், சென்னை பாபாலால் கம்பெனியிலும், டி.ஆர். ஐயங்கார் ஜுவல்லரியிலும், பனகல் பார்க் எதிரில் உள்ள இராமநாதன் ஜுவல்லரியிலும் தலைமை நகைத் தொழிலாளியாகப் பணி யாற்றியவர். நான் மூன்று வயதுக் குழந்தையாக இருந்தபோது சென்னையை விட்டு வெளியேறி ஆந்திர மாநிலம் 'கடப்பா' ஊர் சென்று தொழில் செய்தாராம். ஒரே வருடத்தில் கடப்பாவை விட்டு சொந்த ஊரான வேலூர் மாவட்டம் வாணியம்பாடிக்கு வந்து குடியேறினாராம்.

வண்டுப் பனையோலை – தம்பிக்கு
வாழ்வெழுதும் நல்லோலை
கன்றுப் பனையோலை – தம்பிக்கு
கணக்கெடு நல்லோலை

என்று அந்தக் காலத்தில் குழந்தைகளைப் பள்ளிக்கு அழைத்துச் சென்று பனையோலைக்கு மஞ்சள் குங்குமமிட்டு, அந்தப் பனையோலையில் படிக்கக் கற்றுக் கொடுக்கும் பழக்கம் இருந்ததாம்.

அகத்தில் குடிகொண்டுள்ள அறியாமை இருளைப் போக்கத் துணைபுரியும் உள்ளொளியே அறிவு எனப்படும். 'இளமையிற் கல்வி சிலைமேல் எழுத்து' என்பதை அறிந்த என் தந்தையார் 1955 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5-ந்தேதி என்னை வாணியம்பாடி இந்து ஆரம்பப் பாடசாலையில் சேர்த்தாராம். செல்வி. கோமளா டீச்சர் எனக்கு 'அ' 'ஆ' சொல்லிக் கொடுத்த தெய்வம். என் வாழ்விற்கான அஸ்திவார கல்விக்கூடம் இந்த இந்து ஆரம்பப் பாடசாலைதான்.

என் தந்தையார் 1925 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5-ந்தேதி பிறந்தார் என்பதால் இன்றுவரை எங்கள் குடும்பக் குழந்தைகளை ஜூன் 5-ந்தேதி பள்ளியில் சேர்ப்பது வழக்கமாக உள்ளது.

கல்வியின் மிக்கதாம் செல்வம் ஒன்றில்லையே
கல்வி மிகுந்திடில் கழிந்திடும் கடமை
கற்பதுவே உன் முதற் கடமை
செல்வம் பிறர்க்கு நாம் தந்திடில் தீர்ந்திடும்
கல்வி தருந்தொறும் மிகச் சேர்ந்திடும்
இளமை கழிந்திடில் ஏறுமோ கல்விதான் – அதை
இப்பொழுதே உண்!... அது இனித்திடும் தேன்!

என்று பாவேந்தன் பாரதிதாசன் சொன்னதுபோல் 'கற்பதுவே தன் மகன் கடமை' என்பதை என் பெற்றோர்கள் அறிந்திருந்தார்கள். எல்லாக் குழந்தைகளுமே முதல் ஐந்தாம் வகுப்பு வரை நன்றாகப் படிப்பதைப் போல் நானும் நன்றாகப் படித்திருக்கிறேன். 1960 - 61ல் நான் ஐந்தாம் வகுப்பு படிக்கும்போது திரு. குருநாதன் அவாகள் எனக்கு வகுப்பாசிரியர். திரு. ராஜிக்கண்ணு அவர்கள் தலைமை ஆசிரியர். அப்போது கல்வி அதிகாரியாகப் பணியாற்றிய திரு. நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் எங்கள் பள்ளிக்கு வருகை தந்தார். அவர் எங்கள் வகுப்புக்கு (5-ஆம் வகுப்பு 'பி' பிரிவு) வந்து நான்கைந்து கேள்விகள் கேட்டார். நான்தான் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொன்னேன். 'இந்த வகுப்பில்

மூர்த்தியைப் போல எல்லோரும் நன்றாகப் படிக்க வேண்டும்' என்று சொன்னார். 'Best Student' என்று பாராட்டியது எனக்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்தது.

மாண்பால் ஆகியவன் மாணவன். மாண்பு ஆக்குபவன் மாணாக்கன். பள்ளிக்குச் சென்று படிப்பவன் மாணவன் ஆகி விடமாட்டான். மாண்பாலாகி, மாண்பை ஆக்கி, மாண்புடன் ஒழுகுபவனே மாணவன். ஸ்டூடெண்ட் (Student) என்னும் சொல் ஸ்டடி (Study) என்னும் அடிச்சொல்லிலிருந்து பிறந்தது என்கிறார்கள். எனவே பள்ளியில் படிப்பவன் ஸ்டூடண்ட். நான் ஸ்டூடண்ட் ஆக வாழ்ந்த நாட்களை நினைத்தால் இன்றுகூட மகிழ்ச்சியாக இருக்கின்றது.

இந்து மேல்நிலைப்பள்ளியில் நான் ஏழாம் வகுப்பு படிக்கும்போது நடைபெற்ற குடியரசு தின விழாவில், 'விடுதலையும், சுதந்திரமும்' என்னும் தலைப்பில் பேச்சைத் தயார் செய்து மனப்பாடம் செய்து பேசினேன். 'பொடியன் நன்றாகப் பேசுகிறான்' என்று வந்தவர்கள் பாராட்டியதைக் கேட்டு விழா மேடை ஓரம் நின்று என் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த என் தகப்பனார் ஆனந்த பெருமிதத்தால் அழுதுவிட்டதாக என் அம்மா அடிக்கடி சொல்லுவார்கள்.

வாணியம்பாடி அருகாமையில் உள்ள பள்ளி மாணவர்கள் எங்களை இணைத்து எங்கள் பள்ளியில் 1963 ஆம் ஆண்டில் பேச்சுப்போட்டி நடத்தினார்கள். பேர்ணாம்பட்டு பள்ளியில் பணியாற்றிக் கொண்டிருந்த தமிழாசிரியர் திரு. செயராமன் அவர்கள் தலைமையில், பேர்ணாம்பட்டு, ஆம்பூர் பள்ளி மாணவர்களை அழைத்து வந்தார்கள். ஆறு பள்ளிகளில் பேச்சுப்போட்டி நடத்தி அதில் முதலாவதாக, இரண்டாவதாக வந்த பன்னிரெண்டு மாணவ - மாணவிகள் இந்தப் பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டார்கள். இந்தப் பேச்சுப்போட்டியில் கலந்துகொண்ட எனக்கு புலவர் மு. சுப்பிரமணி அவர்கள் பயிற்சி அளித்தார்கள். நடைபெற்ற பேச்சுப்போட்டியில் நான் முதல் பரிசும், எங்கள் பள்ளித்